
# கமலாம்பிகை செல்வநாயகம்

## நினைவு மலர்



18.08.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை நிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

சுவாமி விபுலாநந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமலாம்பிகை செல்வநாயகம்

**தோற்றம்** — **மறைவு**

19-12-1922 — 18-08-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக் குறிப்பு

திருமதி கமலாம்பிகை செல்வநாயகம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் 1922ம் ஆண்டு மார்கழி மாதம் 19ம் திகதி, காலம் சென்ற திரு அப்பாப்பிள்ளை ராசையாவுக்கும், காலம் சென்ற திருமதி பாக்கியம் ராசையாவுக்கும் அன்புப் புதல்வியாகப் பிறந்தார். இவருக்கு உடன் பிறந்த சகோதரர்கள் நான்கு பேர். காலம் சென்ற திரு பாலசிங்கம் இவரது மூத்த சகோதரன். இவருக்கு மூன்று இளைய சகோதரிகள். திருமதி நீலாம்பிகை ரங்கநாதன், திருமதி நகுலாம்பிகை ஆதிரை, மற்றும் காலம் சென்ற திருமதி கௌசல்யா நடராஜா ஆவர்.

இவர் தனது இளமைக்காலத்தை இலங்கையின் பல்வேறு பகுதிகளில் கழித்தார். இவரது தந்தையார் கடுகண்ணாவை, அட்டன், களுத்துறை ஆகிய இடங்களில் பணிபுரிந்த போது இவரும் சகோதர சகோதரிகளும் அவ்விடங்களில் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரோடு இருக்க வேண்டி ஏற்பட்டது

இவரது ஆரம்பக் கல்வி கண்டி மேல்நிலைப் பள்ளிக் கூடத்திலும், இடைநிலை வகுப்பு யாழ்ப்பாணம் ***Holy Family Convent*** லும் மேற்கொள்ளப்பட்டது. இவர் பள்ளிக்கூடத்தில் விளையாட்டுத் துறையிலும், மற்றும் சித்திரம், தையல் ஆகிய துறைகளிலும் மிகவும் திறமையுள்ளவராக விளங்கி பல பரிசில்களையும் வாங்கியிருக்கின்றார்.

1939ம் ஆண்டு தனது 17வது வயதில் பேராசிரியர் வினாசித்தம்பி செல்வநாயகத்தை திருமணம் புரிந்தார். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இவர் கொழும்பில் கழித்துவிட்டுப் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியச் சென்ற கணவரோடு சென்று, 1971ம் ஆண்டுவரை கண்டியில் வாழ்ந்தார்.

இவருக்கு மூன்று பெண்களும், இரண்டு ஆண்களும் பிறந்தனர். இவரது மூத்த மகள் திருமதி சிவசாந்தி நாரா-ாயணசாமி. இரண்டாவது மகள் காலம் சென்ற திலகவதி. மூன்றாவது மகள் காலம் சென்ற மங்கையர்க்கரசி. இவரது ஆண்பிள்ளைகள் திரு குமாரநாயகம், திரு கனகநாயகம் ஆகியோர்கள் ஆவர்.

1973ம் ஆண்டு கணவர் இறந்த பின்னர் இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார். பிள்ளைகள் யாவரும் வெளிநாடுகளில் வாழ்ந்த காரணத்தால், 1989ம் ஆண்டு யாழ்பாணத்திலிருந்து புறப்பட்டு பிலிப்பீன்ஸ், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் பிள்ளைகளோடு வாழ்ந்து, 1991ம் ஆண்டு கனடாவிற்கு வந்தார். இங்கு கடந்த 14 ஆண்டுகள் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் சூழ தனக்கே உரிய விருந்தோம்பலோடும் என்றும் விலகாத சிரிப்போடும் வாழ்ந்து, 2005ம் ஆண்டு ***August*** 18ம் திகதி காலை ஐந்து மணியளவில் சிவபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தேன் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள்கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடையில் கலையின் எழுத்து அறிவித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தனில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிது எனக்கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழுாத்துடன் கூடி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறிவித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாய! விரைகழல் சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரங்கள்

## திருஞானசம்பந்தர் அருளியது

### *முதலாம் திருமுறை*

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
ஒன்றுடையானை யுமையொருபாகம் முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### *இரண்டாம் திருமுறை*

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே..

வேயுறு தோளிபங்கன் விமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மூன்றாம் திருமுறை*

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழு வேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் அடங்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா நீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரசே.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்நெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்பொரு ளாவது
நாத நாமம் நமச்சி வாயவே.

## திருநாவுக்கரசர் அருளிய
## *நான்காம் திருமுறை*

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறிவேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

சொற்றுனை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் திருமுறை

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

## ஆறாம் திருமுறை

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றேன்

தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம் பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரர் அருளிய
### *ஏழாந்திருமுறை*

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே.

மற்றுப் பற்றெனெக் கின்றி நின்திருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனினிப்பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்ற வாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறிய வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே.

நத்தார்படை ஞானன் பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகர் அருளிய
*எட்டாந்திருமுறை*

# திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லறுத் தானந்தம் ஆக்கியதே- எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம்ஆகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய், விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லையிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறிவேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் யினவெல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய், அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூரி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறம்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி,
மலம்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமி லாப்புண்ணியனே
காக்கும்என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

**திருச்சிற்றம்பலம்**

## கந்தன் பாமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமானபேய்பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண்ணாசையை மறக்க வேண்டும்
உன மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்
நோயற்றவாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு தந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

-இராமலிங்க அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே

அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியேன்று சொல்லு சிவமே
கட்டிம னத்தையாளச் சொல்லு சிவமே

-சிவ யோக சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# One letter speaks for all ...

"Eraham"
Potpathy Road
Kokuvil
22 Aug. 05

My dear Chelva,

It was with a heavy heart that I read Amma's obituary this morning. Please accept our heartfelt condolences.

My mind goes back to 1977 when I was a regular caller at your Kokuvil home. Whether you were in or out, I was always welcome. In all my life, I have come across only a very few people who could be as charming and magnanimous as amma.

One morning in 1981, my youngest son, then a brat of 4, had a fall and had sutures on his tongue. The boy couldn't be fed and we were in a fit. On hearing about it, amma prepared a soothing jelly for him. Recalling it, even today I am moved to tears.

I do meet your father's students - all past 60 - who remember your mother fondly. Their Peradeniya days would have been colourless with the radiating kindly light amma emanated.

She lived a full and happy life - to see her children doing well and her last days were spent in the sunshine of her grandchildren's love.

May she rest in peace.

Ever yours,

S. Pathmanathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

ஒரு மாதத்திற்கு முன்னர் எங்களுக்கு அடித்தளமாக - அன்பு வளையமாக - இருந்த உலகம் திசைமாறி நின்ற போது, எங்களுக்குப் பக்கபலமாக, உறுதுணையாக நின்று, உரிமையோடும், கருணையோடும் உதவிகள் பல செய்து, துயரத்தில் பங்கு கொண்டு, கண்ணீர் துடைத்த யாவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

பிள்ளைகள், சகோதரிகள்
மருமக்கள், குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org